தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

*******

ஆணை எண் 349/ந/2023
நாள் 14.12.2023

திரு. P.இராமச்சந்திரன்,
பொறையார்,
மயிலாடுதுறை மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
மயிலாடுதுறை நகராட்சி,
மயிலாடுதுறை மாவட்டம். – எதிர் மனுதாரர்

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், பொறையார், புதிய ரஹமத் காலனி, கதவு எண்.8 என்ற முகவரியில் வசிக்கும் திரு. P.இராமச்சந்திரன் என்பவரின் 04.10.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 09.10.2023 அன்று பெறப்பட்டு 349/ந/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனு மீது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், பொறையார், புதிய ரஹமத் காலனி, கதவு எண்.8 என்ற முகவரியில் வசிக்கும் திரு. P.இராமச்சந்திரன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

“நான் மேற்கண்ட விலாசத்தில் நிரந்தரமாக வசித்து வருகிறேன். கடந்த 12.10.2015 அன்று எனக்கு பிறந்த குழந்தைக்கு மயிலாடுதுறை நகராட்சியிடமிருந்து பதிவு எண். 6863/2015/02–ன்படி 05.11.2015 அன்று பிறப்புச் சான்று வழங்கப்பட்டுள்ளது. ஆனால் தற்போது அதன் நகல் ஒன்று 19.11.2022–ல் இணையதளம் மூலம் பெறப்பட்டதில் கீழ்க்குறிப்பிட்டவாறு வேறுபாடுகள் உள்ளன.

1) குழந்தையின் பெயர் ஸ்ரீநிஷா என்று 05.11.2015 நாளிட்ட சான்றில் உள்ளது. தற்போது எடுக்கப்பட்ட சான்றில் இ.ஸ்ரீநிஷா என்று உள்ளது.

2) தகப்பனார் பெயர் 05.11.2015 நாளிட்ட சான்றில் பு.இராமச்சந்திரன் என்று பதிவாகியுள்ளது. தற்போது 19.11.2022–ல் பெறப்பட்ட சான்றில் தகப்பனார் பெயர் சி.இன்பராஜ் என்று உள்ளது.

3) குழந்தையின் தாயார் பெயர் 05.11.2015 நாளிட்ட சான்றில் இரா.ஜெயா என்று பதிவாகியுள்ளது. ஆனால் 19.11.2022–ல் பெறப்பட்ட சான்றில் இ.ஜெயா என்று உள்ளது.

எனவே, மேற்கண்டவாறு பதிவுகளில் திருத்தம் செய்யப்பட்டது குறித்து கீழ்க்கண்ட விபரங்கள் உரிய ஆவணங்களுடன் தருமாறு நகராட்சி ஆணையாளரிடம் கோரப்பட்டது.

1) பிறப்பு சான்றுப் பதிவில் திருத்தங்கள் செய்ய விண்ணப்பம் செய்த நபரின் பெயர், விலாசம் தெரிவிக்கவும்.

2) எந்த தேதியில் விண்ணப்பம் செய்யப்பட்டது என்ற தகவல் தரவும்.

3) மேற்கண்ட விண்ணப்பம் தொடர்பாக யார் யாரை விசாரணை செய்யப்பட்டது என்ற தகவல் தரவும்.

இந்நிலையில் மயிலாடுதுறை நகராட்சி ஆணையர் அவரது கடிதம் ந.க.எண்.145/2023 நாள்.09.03.2023–ல் கடிதம் ஒன்றினை மயிலாடுதுறை நகரக் காவல் நிலையத்திற்கு அனுப்பியுள்ளார். அந்த கடிதத்தில் எந்தவித ஆவணங்களும் இல்லாமலும், பதிவாளரின் அனுமதி உத்தரவு இல்லாமலும் விதிமுறைகளை மீறி முறைகேடாக இணையதளத்தில் திருத்தங்கள் மேற்கொண்டு பிறப்புச் சான்றிதழ் பெற்றுள்ளனர் என்றும், இச்சட்டவிரோத செயல் செய்தவர்கள் மற்றும் உடந்தையாக இருந்தவர்களையும், பயனாளிகளையும் கண்டறிந்து சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்குமாறு காவல் ஆய்வாளருக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவித்து அதன் நகலை எனக்கு அனுப்பிவைத்துள்ளார்.

எனவே, உடனடி நடவடிக்கை எடுத்து சரியான தகவல்களை தருமாறு கேட்டு மீண்டும் 26.04.23–ல் மேல்முறையீடு செய்திருந்தேன். அந்த விண்ணப்பத்திற்கு, மயிலாடுதுறை நகராட்சி ஆணையர் அவர்களின் ந.க.2188/2023 எப்.2, 19.05.2023 நாளிட்ட பதில் கடிதத்தில், குழந்தையின் பிறப்புப் பதிவில் எந்தவித முரண்பாடுகளும் இல்லை என்று இறுதியாக பதில் அளித்துள்ளார். மேற்காணும் சூழ்நிலையில்,

1) பிறப்பு இறப்பு பதிவுகள் சம்பந்தப்பட்ட நகராட்சி அலுவலரால் செய்யப்படுகிறது. இதில் தனிநபர் யாரும் திருத்தங்கள் செய்ய முடியாது.

2) தகப்பனாரின் அனுமதியின்றி குழந்தையின் தகப்பனார் பெயரை மாற்றம் செய்து பதிவுகள் செய்துள்ளதாக அளித்துள்ள விளக்கத்தினை ஏற்க முடியாது.

3) அசல் சான்றும், தகப்பனார் பெயரை மாற்றம் செய்து வழங்கப்பட்ட திருத்தப்பட்ட சான்றும் நகராட்சி பிறப்பு இறப்பு பதிவாளரால்தான் வழங்கப்பட்டுள்ளது. நகராட்சி அலுவலகத்தில்தான் முறைகேடு நடந்துள்ளது. ஆனால் தவறை மறைப்பதற்காக காவல் ஆய்வாளருக்கு கடிதம் அனுப்பியுள்ளது தெளிவாகியுள்ளது.

4) முதலில் காவல்துறைக்கு புகார் கடிதம் கொடுத்துவிட்டு, தற்போது பிறப்பு இறப்பு பதிவுகளில் முரண்பாடுகள் இல்லை என்று தெரிவித்துள்ளது தவறானதாகும்.

5) குழந்தை பிறப்புப் பதிவில் திருத்தங்கள் செய்ய அதிகாரம் இருந்தாலும், தகப்பனார் பெயரையே மாற்றிப் பதிவு செய்வதற்கு முன்னதாக, முன்னர் பதிவு செய்யப்பட்ட தகப்பனார் யார், திருத்தம் செய்யவேண்டிய அவசியம் என்ன என்பதை அறியாமலும்

எந்தவித விசாரணையும் செய்யாமல் தகப்பனார் பெயரை மாற்றம் செய்துள்ளது மோசடிச் செயலாகும்.

எனவே, முறைகேடாக எந்தவித விசாரணையும் மேற்கொள்ளாமல் பிறப்புப் பதிவில் தகப்பனார் பெயரை மாற்றம் செய்து பதிவு செய்த பிறப்பு பதிவு அலுவலர் மீதும், நகராட்சி ஆணையர் மீதும், உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

**2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 16.11.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் மயிலாடுதுறை நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.**

மயிலாடுதுறை நகராட்சி ஆணையாளர் தனது 22.11.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:—

''பிறப்பு மற்றும் இறப்பு பதிவேட்டினை ஆய்வு செய்ததில் குழந்தையின் பெயர் ஸ்ரீநிஷா, தந்தையின் பெயர். பு. இராமச்சந்திரன், தாயாரின் பெயர். இரா. ஜெயா எனவும் 12.10.2015 அன்று லூர்து மருத்துவமனையில் குழந்தை பிறந்துள்ளது என பதிவு எண். 6863/2015/02—ல் பிறப்பு பதிவு பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது. மேலும் இந்நகராட்சியில் எந்த மாற்றமும் மேற்கொள்ள உத்தரவிடவில்லை எனவும், இணையதள வழிமூலம் மனுதாரர் பெற்ற பிறப்பு சான்றிதழ் வழங்கப்படவில்லை என பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

**(3) மனுதாரரும் மற்றும் மயிலாடுதுறை நகராட்சி ஆணையரும் 23.11.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 16.11.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**(4) மனுதாரர் திரு. பு. இராமச்சந்திரன் 23.11.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.**

''எனக்கு 12.10.2015 அன்று பெண் குழந்தை பிறந்தது. அதற்கான பிறப்புச் சான்றிதழ் வேண்டி என்னால் விண்ணப்பம் செய்யப்பட்டு 5.11.2015 அன்று பிறப்புச் சான்றிதழ் வழங்கப்பட்டது. அதில் குழந்தையின் பெயர் ஸ்ரீநிஷா என்றும், தந்தை பெயர் பு. இராமச்சந்தின் என்றும், குழந்தையின் தாயார் பெயர் இரா. ஜெயா என்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் கடந்த 19.11.2022 ல் பெறப்பட்ட பிறப்புச் சான்றிதழில் குழந்தையின் பெயர் இ. ஸ்ரீநிஷா என்றும், தந்தை பெயர் சி. இன்பராஜ் என்றும், தாயார் பெயர் இ. ஜெயா என்றும் இடம்பெற்றுள்ளது.

மயிலாடுதுறை நகராட்சியில் மேற்கண்ட விவரங்களை தெரிவித்தபோது, மயிலாடுதுறை நகராட்சியால் 9.3.2023 அன்று காவல் நிலையத்திற்கு கடிதம் அனுப்பியுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

மேற்கண்ட, எனது மகளின் சான்றிதழில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் எனக்கு கடும் மனஉளைச்சல் ஏற்பட்டுள்ளது. எனவே முறைகேடாக எந்தவித விசாரணையும் மேற்கொள்ளாமல் எனது மகளின் பிறப்புச் சான்றிதழில் திருத்தங்களை மேற்கொள்வதற்குக் காரணமான அலுவலர்கள் மற்றும் போலி சான்றிதழ் பெறுவதற்கு உடந்தையாக இருந்த நபர்கள் மீதும் தேவையான நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(5) எதிர் மனுதாரரான மயிலாடுதுறை நகராட்சி ஆணையராகப் பணியாற்றும் திரு. அ. சங்கர் மற்றும் சுகாதார ஆய்வாளராகப் பணிபுரியும் திருமதி. J.S.பிருந்தா ஆகியோர் 23.11.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்.

"மயிலாடுதுறை மாவட்டம் பொறையாரைச் சேர்ந்த திரு. இராமச்சந்திரன் என்பவருக்கு 12.10.2015 அன்று பிறந்த அவரது பெண் குழந்தைக்கு நகராட்சியால் 5.11.2015 அன்று பிறப்புச் சான்றிதழ் வழங்கியபோது, குழந்தையின் பெயர் ஸ்ரீநிஷா என்றும், தந்தை பெயர் பு. இராமச்சந்தின் என்றும், குழந்தையின் தாயார் பெயர் இரா. ஜெயா என்றும் பதிவு செய்து பிறப்புச் சான்றிதழ் வழங்கப்பட்டது. மேற்கண்ட பதிவினை நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் பிறப்புச் சான்றிதழ் பதிவேட்டிலும் 16.10.2015 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர், மேற்கண்ட குழந்தையின் பிறப்புச் சான்றிதழின் நகல் 19.11.2022 அன்று பெறப்பட்டதில் குழந்தை, தாயார் மற்றும் தந்தையின் பெயரில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன என்றும், வேறுபாடுகள் உள்ளது என மனுதாரர் புகார் அளித்ததையொட்டி இணைதளத்தில் உள்ள பதிவுகள் மற்றும் அசல் பிறப்பு பதிவேட்டுடன் ஒப்பிட்டு பார்க்கையில் 05.11.2015ல் வழங்கப்பட்ட சான்றிதழில் உள்ள விவரங்களே இடம் பெற்றுள்ளன. எனவே, 19.11.2022 மற்றும் 2023ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ள பிறப்புச் சான்று 2015ல் வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழில் உள்ள விவரங்களே இடம்பெற்றுள்ளன.

இந்நேர்வு குறித்து 09.03.2023 காவல் துறையில் புகார் அளிக்கப்பட்டுள்ளது எனவும் இம்முறை மன்றத்தில் தெரிவித்து, நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் பிறப்புச் சான்றிதழ் பதிவேட்டினையும், மேலும் மேற்கண்ட மனுதாரரின் குழந்தை ஸ்ரீநிஷாவின் பிறப்புச் சான்றிதழின் நகலையும் மேலும் இன்றைய தினம் கணினியின் மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்டதன் நகலையும் இம்முறை மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கிறோம்" என தெரிவித்துள்ளனர்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், மயிலாடுதுறை நகராட்சி ஆணையரின் அறிக்கை, வாக்குமூலம், சுகாதார ஆய்வாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

மயிலாடுதுறை மாவட்டம், பொறையார் என்ற இடத்தைச் சார்ந்த மனுதாரர் திரு. P. இராமச்சந்திரன் என்பவர் தனது 04.11.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில், 12.10.2015 அன்று பிறந்த தனது பெண் குழந்தையான ஸ்ரீநிஷாவின் பெயர் பதிவு செய்யப்பட்டதில் குழந்தை பெயர் ஸ்ரீநிஷா, தந்தை பெயர் பு. இராமச்சந்திரன் மற்றும் தாயாரின் பெயர் இரா. ஜெயா என மனுதாரருக்கு 05.11.2015 அன்று பதிவு எண். 6863, பதிவு நாள் 16.10.2015 எனக் குறிப்பிட்டு வழங்கப்பட்டுள்ள நிலையில் தனது குழந்தையின் பிறப்புச் சான்றின் நகலினை 19.11.2022 அன்று இணையதளம் மூலம் பெறப்பட்டதில் தனது குழந்தை பெயர் ஸ்ரீநிஷா என்பதற்கு பதிலாக இ. ஸ்ரீநிஷா என்றும், தந்தை பெயர் திரு. P. இராமச்சந்திரன் என்பதற்கு பதிலாக சி. இன்பராஜ் எனவும் மற்றும் தாயார் பெயர் இரா. ஜெயா என்பதற்கு பதிலாக இ. ஜெயா எனவும் நகராட்சியால், பெற்றோரின் எவ்வித அனுமதியும், முறைகேடாக, நகராட்சி இணையதளத்தில் பிறப்புச் சான்றில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என புகாராக தெரிவித்து, திருத்தம் செய்த நகராட்சி அலுவலர்கள் மற்றும் திருத்தம் கோரி விண்ணப்பித்த நபர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தனது மனுவில் இம்முறைமன்ற நடுவத்தை கோரியுள்ளார்.

மேற்காணும் பிறப்புச் சான்று திருத்தம் தொடர்பாக மனுதாரரால் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்கீழ் தகவல்கள் கோரியதைத் தொடர்ந்து, மயிலாடுதுறை நகராட்சி ஆணையாளர் 09.03.2023 நாளிட்ட கடிதம் மூலம் மயிலாடுதுறை காவல் ஆய்வாளரிடம் புகார் மனு சமர்ப்பித்து, நகராட்சி சான்று பதிவாளரின் அனுமதியின்றி இணையதளத்தில் திருத்தம் செய்தவர்கள் மீது சட்டரீதியான நடவடிக்கை எடுக்கக் கோரியுள்ளது ஆவணங்களின் மூலம் தெரிய வருகிறது.

நகராட்சியில் பிறப்பு–இறப்பு பதிவு செய்யும் பதிவாளர், உரிய User Name மற்றும் Password ஆகியவற்றை பயன்படுத்தி, இணையதளத்தில் பதிவு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ள நிலையில், இரகசியமாக பாதுகாக்கப்பட வேண்டிய Password ஐ நகராட்சி பணியாளர்கள் மட்டுமே தெரிந்திருக்க வாய்ப்பு உள்ளது. இந்நிலையில் நகராட்சி ஆணையாளர் காவல்துறையில் புகார் தெரிவித்துள்ளதன் மூலம், நகராட்சி ஆவணங்கள் குறித்தான இரகசிய தகவலை உரிய பாதுகாப்பின்றி பொறுப்பற்ற முறையில் நகராட்சி ஆணையர் மற்றும் பதிவாளர் கையாண்டு உள்ளது அப்பட்டமாக தெரிய வருகிறது. இதனை இம்முறைமன்ற நடுவம் வன்மையாகக் கண்டிக்கிறது.

மேலும் மனுதாரரின் புகார் மனு, நகராட்சியில் வரப்பெற்றதும், 19.11.2022 அன்று இணையதளத்தில் முறைகேடாக திருத்தம் செய்து வழங்கப்பட்ட குழந்தையின் பிறப்புச் சான்றினை இரத்து செய்ய நடவடிக்கை எடுக்காமல் மெத்தனத்துடன் செயல்பட்டுள்ள நகராட்சி ஆணையாளர் மற்றும் சுகாதார ஆய்வாளரின் நடவடிக்கையை இம்முறைமன்ற நடுவம் வன்மையாகக் கண்டிக்கிறது.

மனுதாரருக்கு தனது குழந்தையின் பிறப்புச் சான்று 05.11.2015 அன்று வழங்கப்பட்ட தகவல்களுடன், மனுதாரின் புகார் மனு குறித்து 23.11.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையின் போது இணையதளம் மூலம் பதவிறக்கம் செய்த மேற்காணும் குழந்தையின் பிறப்புச் சான்றின் தகவல்கள் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டதில் எவ்வித திருத்தமும் இல்லாமல் 05.11.2015 அன்று வழங்கப்பட்ட தகவல்கள் உள்ளதையே சான்றின் மூலம் தெரிய வருகிறது.

இருப்பினும், குழந்தையின் பெற்றோரின் அனுமதியின்றி குழந்தையின் பிறப்பு சான்றிதழில் முறைகேடாக திருத்தம் செய்து சான்றிதழ் வழங்கியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் பொருட்டு காவல்துறையில் புகார் அளித்து சுமார் 7 மாதங்கள் கடந்த நிலையில் போலி ஆவணம் தயாரித்தவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கையை வலியுறுத்தவோ, எவ்வித தொடர் நடவடிக்கையோ எடுக்காமல் எவ்வித தனி கவனமும் செலுத்தப்படாத நகராட்சியின் செயலை ஒரு கண்துடைப்பு நடவடிக்கையாகவே இம்முறைமன்றம் கருதுகிறது. மேலும் மயிலாடுதுறை நகராட்சியின் சான்றிதழில் சம்மந்தப்பட்ட மண்டலத்தின் துப்புரவு ஆய்வாளரின் User name, Login Passward இல்லாமல் இந்த முறைகேட்டில் ஈடுபட இயலாது. இந்த போலி ஆவண முறைகேடு சம்பந்தமாக துப்புரவு ஆய்வாளர், எழுத்தர்கள் மற்றும் அலுவலர்கள் மீதும், இது எவ்வாறு நடைபெற்றது என்பது தொடர்பாகவும் அலுவல் ரீதியாக எவ்வித குறிப்பாணையும் வழங்கபடாத நகராட்சியின் செயல்பாட்டின் மீது ஐயப்பாடு எழுகிறது. எனவே, மெத்தனமாகவும், அலட்சியபோக்குடனும் இந்நிகழ்வினை கையாண்ட சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது துறை ரீதியான கடுமையான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

The Municipal Commissioners past and present during the occurrence seem to help out the delinquent criminal subordinate involved in this dare-devil attempt of distorting and fabricating the changes in the Birth Records of the child. The DMA is directed to take the investigation to its logical end by launching severe disciplinary action against the delinquent subordinate who deserves to be dealt with as severely as possible for such an audacious act almost with no precedents. The forged certificate is ordered to be cancelled, as withdrawn, invalid, illegal and imaginary.

2023 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 14–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. P.இராமச்சந்திரன்,
நெ. 8, புதிய ரஹமத் காலனி,
பொறையார், தரங்கம்பாடி வட்டம்,
மயிலாடுதுறை மாவட்டம் – 609 307.

2) ஆணையாளர்,
மயிலாடுதுறை நகராட்சி,
மயிலாடுதுறை மாவட்டம் – 609 001.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உரையில்)

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்

15/12/23

சென்னை–600 032